

முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, பொங்கல் விடுமுறை முடிந்து தென் மாவட்டங்களில் இருந்து சென்னை மற்றும் பிற நகரங்களுக்குத் திரும்பும் பொதுமக்களின் வசதிக்காகக் கூடுதல் அரசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, 18.01.2026 அன்று மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பயணிகளுக்காக இயக்கப்படும் கூடுதல் அரசுப் பேருந்துகள் மற்றும் செய்யப்பட்டுள்ள சிறப்பு வசதிகள் குறித்து நேரில் ஆய்வு செய்தார். அதனைதொடர்ந்து பயணிகள் எவ்விதச் சிரமமுமின்றி, பாதுகாப்பாகத் தங்களது இருப்பிடங்களுக்குச் சென்று சேரத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

## இராமநாதபுரம் மாவட்டம்

# இராமேஸ்வரம் பகுதியில் மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை முகாம்!

### மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் – மீனவர் நல வாரியத் தலைவர் அ.ஜோசப் ஸ்டாலின் பங்கேற்பு!

இராமநாதபுரம், ஜன. 20 –

கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த உத்தரவிட்டிருந்தார். அதன்படி, தமிழகம் முழுவதும் நூறு இடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட தங்கச்சிமடம், மண்டபம், திருப்பாலைக்குடி, களிமண்குண்டு ஆகிய இடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

கூட்டத்தில் கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான ஜோசப் ஸ்டாலின் நலவாரிய அட்டையை உறுப்பினர்களுக்கு வழங்கிப் பேசினார். அப்போது அவர் பேசுகையில், "கடந்த 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் தேதி, ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் நடந்த மீனவர் நல மாநாட்டில் முதல்வர் அறிவித்த திட்டங்கள் ஒவ்வொன்றும் வரலாற்று சிறப்புமிக்கவை என்பதை இந்த நேரத்தில் நினைவூட்டக் கடமைப்பட்டு உள்ளேன்.

மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை 5000 ரூபாயில் இருந்து, 8000 ரூபாயாக உயர்த்தியது கழகத் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தான்! அந்த அறிவிப்பை உங்கள் ஊரில் தான் முதல்வர் வெளியிட்டார். இதில் ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 39787 மீனவர்கள் பயனாளிகளாக உள்ளனர். இதுபோக 60 வயதுக்கு மேற்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடி தடைக்காலத்தில் நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. இதில் ராமநாதபுரம் மாவட்டத்தில் 3142 பேர் பயனாளிகளாக உள்ளனர்.

மீனவர்களுக்கான வீடுகட்ட பட்டா வழங்கும் திட்டத்தில் இதுவரை ராமநாதபுரம் மாவட்டத்தில் 1096 மீனவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீன்பிடித் தொழிலுக்கான கூட்டுறவு கடன் வழங்கும் திட்டத்தின் கீழ், ராமநாதபுரம் மாவட்டத்தில் 3007 மீனவர்களுக்கு இதுவரை கடன் வழங்கப்பட்டுள்ளது.

2023 மீனவர் நல மாநாட்டின் போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விசைப்படகுகளுக்கான மானிய விலை டீசலை 18 ஆயிரம் லிட்டரில் இருந்து, 19000 லிட்டராக கூட்டி அறிவித்தார்கள். இதேபோல் நாட்டுப்படகுகளுக்கு 4000 லிட்டரில் இருந்து 4400லிட்டராக உயர்த்தி வழங்கப்படுகிறது. மீனவர்களுக்கான வீட்டுவசதித் தி ட்டத்தின் கீழ், வழங்கப்படும் தொகையானது 1 லட்சத்து 70 ஆயிரம் ரூபாயில் இருந்து, 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாயாக கழக ஆட்சியில், மாண்புமிகு முதல்வர் அவர்களால் உயர்த்தப்பட்டது. இப்படி கழக அரசு மீனவர்களுக்கு ஏராளமான திட்டங்களை செய்திருக்கிறது.

இவ்வளவு திட்டங்களை மீனவ மக்களுக்குச் செய்திருக்கும் முதல்வர் அவர்கள், நலவாரியத்திலும் மீனவர்களை அதிகளவில் சேர்க்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். அதற்காகவே தமிழகம் முழுவதும் 100 இடங்களில் சிறப்பு முகாம்களை நடத்துகிறோம். நல வாரியத்தில் உறுப்பினராக இருக்கும் இருக்கும் மீன் தொழிலாளி விபத்து ஏற்பட்டு மரணித்தாலோ, அல்லது இயற்கை மரணம் அடைந்தாலோ நிவாரணத் தொகை கிடைக்கும். இதேபோல், நலவாரிய உறுப்பினர்களின் குழந்தைகளின் கல்வி, திருமணம், மகப்பேறு என அனைத்திற்குமே நலவாரியமானது நிதி உதவி வழங்கி வருகிறது.

இதையெல்லாம் மீனவ சொந்தங்கள் பயன்படுத்த வேண்டுமானால், நலவாரியத்தில் உறுப்பினராக வேண்டும். மீனவர்களுக்கு எப்போது, எந்த கோரிக்கையென்றாலும் செய்துதர முதல்வர் தயாராக உள்ளார். ராமநாதபுரம் மாவட்டத்திற்கு என்றே கழக அரசு பல திட்டங்களைத் தந்துள்ளது.

**மீனவ கிராமங்களின் மேம்பாடு!**

இராமநாதபுரம் மாவட்டம், ரோச் மாநகர் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்த கழக ஆட்சியில் 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன. இதே போல் திருப்பாலைக்குடி, நம்புதாளை மீனவ கிராமங்களில் மீன் இறங்குதளம் அமைக்க தலா 1.63 கோடிகள் ஒதுக்கப்பட்டு டெண்டர் கோரப்பட்டுள்ளது.

இதேபோல் வாலிநோக்கம், மோர்பண்ணை மீன் இறங்குதளங்களிலும் கூடுதல் கட்டமைப்பு வசதிகள் செய்ய தலா 80 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு டெண்டர் கோரப்பட்டுள்ளது.

ராமேஸ்வரம் மீன் இறங்குதளத்தில் கூடுதல் கட்டமைப்பு வசதிகள் அமைக்க 1 கோடியே 63 லட்சம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு டெண்டர் கோரப்பட்டுள்ளது.

கடல் சீற்றத்தில் இருந்து மீனவர்களை பாதுகாக்கும் வகையில் மேற்குவாடி மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்க 24 கோடியே 27 லட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, டெண்டர் கோரப்பட்டுள்ளது. ஏர்வாடி மீனவ கிராமத்திலும் தூண்டில் வளைவு அமைப்பது தொடர்பாக ஐஐடி மூலம் ஆய்வு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. தங்கச்சிமடம் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்தும்வகையில் 150 கோடி ரூபாய்க்கு பணிகள் நடந்து வருகிறது. இதேபோல் இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகு மற்றும் நாட்டுப்படகுகளுக்கு முதல்வர் பொது நிவாரண நிதியில் இருந்து, முதல்வர் அவர்கள் நிவாரணத் தொகை விடுவித்தார். கடந்த ஆண்டு 3 கோடியே 96 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

**தூண்டில் வளைவு!**

குந்துகால் மீன் இறங்குதளத்தினை தூண்டில் வளைவுடன் மேம்படுத்த 148 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, டெண்டர் கேட்கப்பட்டுள்ளது. இதேபோல் பாம்பன் வடக்கு மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்க 58 கோடியே 50 லட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு டெண்டர் கேட்கப்பட்டுள்ளது. மீனவர்களுக்கு இவ்வளவு திட்டங்களை நம் முதல்வர் அவர்கள் வழங்கியுள்ளார். மீனவர்கள் வளர்ச்சியில் எப்போதும் அக்கறையுடன் இருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இந்த நல்ல நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நலவாரிய உறுப்பினராக நீங்கள் சேர்வதுடன், உங்கள் சுற்று வட்டாரப் பகுதிகளிலும் இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.என்றார்.

தொடர்ந்து இந்நிகழ்வில் பேசிய மாவட்ட கழக செயலாளரும், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினருமான காதர் பாஷா முத்துராமலிங்கம் பேசுகையில், அரசின் திட்டங்களை மீனவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். கழகத் தலைவரின் உத்தரவுப்படி நடைபெறும் இந்த சிறப்பு முகாம்களில் உறுப்பினர் அட்டை பெற்று, இதில் இருக்கும் வாய்ப்புகளையும் மீனவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மீனவர்கள், மீனவ பெண்மணிகளுக்கு தற்சார்பு பொருளாதாரத்தை எட்டும் சூழல் ஏற்பட்டால் அந்த சமூகம் முன்னேறும். சமூகம் முன்னேறினால் நாடு வளர்ச்சியடையும். இதுதான் திராவிட மாடலின் சிந்தாந்தம். இந்தியாவிலேயே, தமிழகம் தான் இன்று பொருளாதார வளர்ச்சியில் அசுர பாய்ச்சல் நிகழ்த்துகிறது.

மீனவர் வளர்ச்சியில் எப்போதுமே திராவிட மாடல் அரசு பிரத்யேக கவனம் செலுத்துகிறது.என்று கூறினார்.

இந்நிகழ்வில் மாநில மீனவர் அணி துணை செயலாளர் ரவிச்சந்திர ராம வன்னி, நலவாரிய உறுப்பினர்கள் என்.ஏ.போஸ், வி.பி.சேசு ராஜா, ஸ்டெல்லா இருதயமேரி, லிலேபர், ஒன்றிய செயலாளர் பாண்டி உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகளும். மீன்வளத் துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.




தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் மாற்றுத்திறனாளிகளுடன் இணைந்து தமிழர் திருநாளை முன்னிட்டு சமத்துவப் பொங்கல் மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தென்காசி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டாக்டர் கலை கதிரவன், மாவட்ட துணை செயலாளர் கனிமொழி, மாநில விவசாய அணி இணை செயலாளர் அப்துல் காதர், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் அண்ணாமலை, புதிய உதயம் அனைத்து மாற்றுத் திறனாளிகள் சங்கம் டிசம்பர் இயக்கம் சேக் முகமது, கழக நிர்வாகிகள் கருப்பண்ணன், சுப்பிரமணியன், ராமராஜ், முத்து சுப்பிரமணியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி நெல்லை தச்சநல்லூரில் தச்சை பகுதி பொறுப்பாளர் டாக்டர். சங்கர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.பங்கேற்று வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுக் கோப்பை மற்றும் ரொக்கப் பணம் வழங்கினார்.நிகழ்ச்சியில் மேயர் ராம கிருஷ்ணன், மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்,மாநகர கிழக்கு பொறுப்பாளர் தினேஷ், கழகத்தினர் முத்து ராமன், சடாமுனி, சிந்து முருகன், பிரேம் கணேசன், ராசுக்குட்டி, மாரிச்சாமி, பேச்சிமுத்து ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# முதல்வரின் 'ஆப்ஸ்பின்' 2026 இல் வெல்லும்!



இந்திய கிரிக்கெட் அணி ஆண்டாண்டு காலமாக வெற்றி பெறுவது ஸ்பின் பௌலிங்கால்தான். அஸ்வின், வருண் சக்கரவர்த்தி, வெங்கட்ராகவன், அனில்கும்ளே, பிரசன்னா என்று எழுதிக் கொண்டே போகலாம். ஆப்ஸ்பின் போடுவதில் தமது இளமை காலத்தில் வல்லவராக நம் முதல்வரும் இருந்துள்ளார். அதனால் வரவிருக்கும் 2026 தேர்தலில் அவரது அரசியல் ஆப்ஸ்பின்னால் அ.தி.மு.க, பா.ஜ.க. விக் கெட்டுகளை எடுத்து மிகப் பெரிய வெற்றிப் பெறப் போகிறார். மேன் ஆப் தி மேட்ச், மேன் ஆப் தி சீரிஸ், மேன் ஆப் தி எலெக்சன் என அனைத்துப் பதக்கங்களையும் அவரே பெறப் போகிறார்.

தமிழ்நாட்டின் கடன் பற்றிப் பா.ஜ.க.வினர் பேசுகின்றனர். அதுசரி 2014 பிரதமர் மோடி பிரதமராக அமரும் வரை இந்தியாவின் கடன் வெறும் ரூ.53 லட்சம் கோடிதான். இன்று கடன் எவ்வளவு வாங்கி இருக்கிறீர்கள்! கிட்டத்தட்ட ரூ.190லிருந்து 200 லட்சம் கோடி. உங்களுக்கு கடனைப் பற்றி பேச என்ன யோக்கியதை இருக்கிறது.

பார்த்தசாரதி கோயிலுக்கு முதல்வரால் போக முடியுமா? என்கிறீர்கள். பார்த்தசாரதி கோயிலுக்குப் போவது என்ன முடியாத காரியமா? இப்படி பேசும் எச்.ராஜா, அண்ணாமலை, தமிழிசை, நயினார், முருகன், மோடி, அமித்ஷா என்று அவர்களில் யாராவது ஒருத்தர் முதுகில் அம்பு குத்தி முகத்தில் பெரிய வேல் குத்தி வாகனத்தில் தொங்கிக் கொண்டு வந்து நல்ல கொழுந்துவிட்டு எரியும் தீயை மிதிப்பார்களா. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதுதான் தி.மு.க.வின் கொள்கை மறவாதீர்கள்.

மகாத்மா காந்தியின் மீது என்றும் வெறுப்புக் கொண்டவர்கள்தான் பா.ஜ.க மற்றும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள். அதனால் தான் கோட்சே என்ற கொடிய ஆர்.எஸ்.எஸ்காரன் காந்தியாரைச் சுட்டுக் கொன்றான். மேலும் சுட்டதை நியாயப்படுத்தினான். அந்த கோட்சே விற்கு சிலை வைக்க வேண்டும் என்கின்றனர் பா.ஜ.க.வினர். பலர் அந்த கோட்சேவின் பெயரை தம் கைகளில் பச்சைக் குத்தி கொண்டுள்ளனர்.

இந்த நாசக்காரக் கும்பலின் காந்தியாருக்கு எதிரான வெறுப்புணர்வு இன்று வரை ஓய்ந்த பாடில்லை. அதன் வெளிப்பாடுதான் மன்மோகன் சிங் ஆட்சியில் 2005ல் கொண்டுவரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் பெயரை பா.ஜ.க மைனாரிட்டி அரசினர் மாற்றியுள்ளனர்.

வி.பி.ஜி.ராம்ஜி என்று இந்தியில் பெயர் வைத் துள்ளனர். அது மட்டுமல்ல எந்த ஒரு திட்டத்திற்கும் அவர்கள் இந்தியிலேயே பெயர் வைக்கின்றனர். ஏற்கனவே காலங்காலமாக இருந்து வந்த IPC, CRPC, IEA அதாவது இந்திய தண்டனை சட்டம், குற்றவியல் சட்டம், இந்திய எவிடன்ஸ் சட்டம் என்ற பெயர்களை சொல்லவே முடியாத இந்தியில் பெயரை மாற்றினர்.

இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட 22 மொழிகளில் இந்தியும் ஒன்று அவ்வளவுதான். பிறகு எதற்கு அந்த மொழியில் மட்டும் பெயர் மாற்றங்களை செய்கின்றனர். இதன் மூலம் இந்தியையும் சமஸ்கிருதத்தையும் மற்ற மாநிலங்களில் திணிக்க முயல்கின்றனர் என்பதை தவிர வேறென்ன காரணம் இருக்க முடியும். அந்தச் சட்டங்களின் பெயரை சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கறிஞர் சொல்லச் சிரமப்பட்ட போது உயர்நீதிமன்ற நீதிபதி அதை விடுங்க பழைய படியே சட்டங்களை குறிப்பிட்டுப் பேசுங்கள் என்று கூறியுள்ளார்.

காந்தி பெயரிலான வேலை திட்டத்தை 100 நாட்களிலிருந்து 125 நாட்களாக உயர்த்தியுள்ளனர். அன்றைய பிரதமர் மன்மோகன் சிங் இத்திட்டத்தை அறிமுகப்படுத்தும் போது நிதி ஒரு பிரச்சினையாக இருக்காது என்றார். ஆனால் தற்போதைய அரசோ நிதியில் 60% ஒன்றிய அரசும் 40% மாநில அரசும் தரவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. ஏற்கனவே நிதியை பல்லாயிரம் கோடி குறைத்தது இன்றைய ஒன்றிய அரசு. 40 நாட்கள் வேலை வழங்குவதற்கே அந்த நிதி போதாது என்ற நிலை இருந்தது. நிதியும் நிலுவையில் உள்ளது.

**வி.பி.கலைராஜன்**
*கழக இலக்கிய அணிச் செயலாளர்*



இந்தத் திட்டத்தில் பயனடைபவர்கள் பெரும்பாலும் கிராமப்புற பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள், முதியோர்கள், தொழிலாளர்கள்தான். இதை கணக்கில் கொள்ளாத பா.ஜ.க. அரசு இதற்காக நிதியை அதிகரித்து அவ்வரசே தர வேண்டும். மாநில அரசுக்கு மடைமாற்றம் செய்யக்கூடாது. இதற்கு அப்படியே ஒப்புதல் வழங்கிவிட்டார் ஜனாதிபதி திரௌபதி முர்மு.

ஏற்கனவே பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தில் 61% நிதி மாநில அரசு தான் தருகிறது ஒன்றிய அரசு 39% தான் தருகிறது. பெயர் மட்டும் பிரதமர் பெயர். பிரதான் மந்திரி மத்திய சம்பந்த யோஜனா திட்டம் ஒன்றிய அரசு அறிவித்தது. அதற்கான நிதி மாநில அரசு 73% ஒன்றிய அரசு தருவது 27% தான். பெயர் என்னவோ பிரதமர் பெயர். ஜல்ஜீவன் மிஷன் திட்டம் மாநில அரசு தரும் நிதி 55% மீதம் ஒன்றிய அரசு. முதியோர் உதவித் தொகைக்கு ஒன்றிய அரசு தருவது வெறும் 200 ரூபாய் தான். மீதம் ஆயிரத்துக்கும் மேல் மாநில அரசு தான் தருகிறது. பெயர் மட்டும் பிரதமர் பெயர் இருக்க வேண்டும். இது என்ன நியாயம்? கேட்டால் ஸ்டிக்கர் ஒட்டுகிறது தமிழக அரசு என்று பா.ஜ.கவினர் கூறுகின்றனர்.

இயற்கைப் பேரிடர் நிதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு தர வேண்டிய நிதி மாநில அரசு கேட்டது ரூ.24,679 கோடி. ஆனால் ஒன்றிய அரசு தந்தது வெறும் 4136 கோடி மட்டுமே. அதாவது 17% தான். இதே பா.ஜ.க. ஆளும் பல மாநிலங்களுக்கு 30 லிருந்து 35% வரை வழங்கியுள்ளது. அப்படியானால் தமிழர்கள் இந்தியர்கள் இல்லையா?

பிரதமர் மோடி மற்றும் அமைச்சர் அமித்ஷா தமிழ்நாடு வரும் போதெல்லாம் தமிழ் பண்பாடும், கலாச்சாரமும் பழமையானது என்பது இந்தியாவிற்குப் பெருமை. தமிழ் மொழி உலகில் மூத்த மொழி அந்த மொழியை கற்றுக் கொள்ளவில்லையே என்று வருத்தப்படுகிறோம் என்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டிற்கு சமக்ர சிக்ஷான் அபிமான் திட்டம் மூலம் தரவேண்டிய ரூ.3000 கோடிக்கு மேல் நிதி தர மறுக்கிறார்கள். கேட்டால் இந்தி மொழியை மூன்றாம் மொழியாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்கிறார்கள். நீங்கள் 10,000 கோடி தந்தாலும் இந்தியை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று தமிழ்நாட்டு முதல்வர் தளபதி அவர்கள் கூறி விட்டார்கள்.

சமஸ்கிருதம் மொழி பேசுபவர்கள் வெறும் 24,000 பேர் தான். ஆனால் தமிழ் மொழி பேசுபவர்கள் தமிழ்நாட்டில் 8 கோடி பேர் உலகளவில் 10.50 கோடி பேர். ஆனால் தமிழ் மீது பாசம் இருப்பதைப் போல் காட்டிக் கொள்ளும் ஒன்றிய அரசு தமிழை விட 17% சமஸ்கிருத வளர்ச்சிக்கு கூடுதலாக நிதி தருகிறது. இதற்கு பெயர் என்ன வாரணாசி அல்வாவா? அல்லது குஜராத் அல்வாவா?

வாக்காளர் வரைவு திருத்தம் அவசர கதியில் நடத்த வேண்டாம் என்றுதான் முதல்வர் கூறினார். இன்றைக்கு 97 லட்சம் பேர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இதில் என்ன சதி நடந்துள்ளது என்பதை விசாரித்தால்தான் உண்மை வெளிவரும். உடனே தமிழிசை இதெல்லாம் கள்ள ஓட்டாம்! இதை வைத்துத் தான் தி.மு.க. வெற்றி பெற்றுள்ளது என்று அள்ளி விட்டுள்ளார்.

துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் இந்தி கற்று வருகிறாராம். கனிமொழி கருணாநிதி எம்.பி. எத்தனை ஆண்டுகளாக டெல்லி அரசியலில் உள்ளார். அவருக்கு இப்போது தான் இந்தி கற்க வேண்டும் என ஆசை வந்ததா? அவதூறின் மறுவடிவம் தமிழிசையே! எந்த ஆசிரியரிடம் அவர் இந்தி கற்று வருகிறார் என்பதை உங்களால் கூற முடியுமா? இந்தி கற்று வருகிறேன் என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. தங்களிடம் கூறினாரா?

13 அமைச்சர்கள் மீது ஊழல் வழக்கு உள்ளதாம். இனிமேல் தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டம் சிறையில்தான் நடக்கப் போகிறதாம். தமிழிசை கூறியுள்ளார். ஆதாரத்துடன் ஊழல் வழக்கை கூறுவாரா? எந்த 13 அமைச்சர்கள் என்று கூறுவாரா?

மேலும் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை திருவள்ளுவர் கோட்டையாக அறிவிக்க வேண்டுமாம். அம்மையாரே செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் புல் வெட்ட டெல்லியில் அனுமதி கேட்க வேண்டுமா என்று கேட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இது உங்களுக்கு தெரியாது.

அதற்காகத் தான் சேப்பாக்கத்தில் புதிய தலைமை செயலகத்தை எழில் வளத்துடன் கட்டினார் தலைவர் கலைஞர். அந்த கட்டிடத்தில் அமர்ந்து பேசுகிற வாய்ப்பைப் பெற்றவன் நான். ஆனால் கலைஞர் கட்டினார் என்பதற்காக அந்த தலைமை செயலகத்தை மருத்துவமனையாக மாற்றியவர் ஜெயலலிதா அம்மையார்.

எனவே தமிழிசையே திருவள்ளுவர் மீது உங்களுக்கு அவ்வளவு பாசமா? ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில்தான் செயின்ட் ஜார்ஜ் கோட்டை உள்ளது. உடனே பிரதமர் மோடியிடம் கூறி திருவள்ளுவர் பெயரை வைக்கச் சொல்லுங்கள். அதற்கு முன் ஒரு கேள்வி. உங்கள் கட்சியைச் சேர்ந்த எம்.பி. தருண் விஜய் என்பவர் திருவள்ளுவர் சிலையை தமிழ்நாட்டிலிருந்து கொண்டு சென்றார். அதை எங்கே வைத்துள்ளார் என்று கூற முடியுமா? தூக்கி வீசிவிட்டாரா? அப்படியென்றால் எங்கே வீசியுள்ளார் கண்டுபிடித்து கூறுங்கள்.

தமிழிசையே! உங்களால் முடிந்தால் பிரதமர் மோடியிடம் பேசி திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வழி வகுப்பீர்களா? இங்கே வாய் அளப்பதைப் போல் மோடியிடம் வாய்அளந்து வெற்றி காணுங்கள்.

கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படையில் செயல்படக் கூடிய நாடு இந்தியாவாம் உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர் கூறியுள்ளார். கூட்டாட்சி தத்துவம் குடியுரிமைச் சட்டம் கொண்டு வந்த போது என்ன ஆனது? வேளாண் பாதுகாப்பு சட்டம் கொண்டு வந்த போது 726 விவசாயிகள் ஓராண்டுக்கு மேல் போராடி வீதியில் செத்து விழுந்தார்களே அப்போது எங்கே போனது?

மணிப்பூரில் பழங்குடியின குக்கி மக்கள் லட்சக்கணக்கானோர் வேறு மாநிலத்திற்கு சென்றனர். பல நூறு பேர் கொல்லப்பட்டனர். அந்த மணிப்பூருக்கு சென்று பார்க்க 863 நாட்கள் பிரதமர் மோடிக்கு தேவைப்பட்டது. கிறிஸ்தவ கோயில்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. இப்போது சத்தீஸ்கரில் கிறிஸ்துவ தேவாலயங்கள் இடிக்கப்பட்டு வருகிறது. கிறிஸ்தவர்கள் படுகொலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இதுதான் கூட்டாட்சி தத்துவமா?

பட்டியலினத்தைச் சேர்ந்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி கவாய் மீது செருப்பு வீசப்பட்டது. வீசியவர் ஒரு ஆர்.எஸ்.எஸ். காரர் நீதிமன்றத்திற்குள்ளேயே தலைமை நீதிபதிக்கு பாதுகாப்பு இல்லை. பிரதமர் மோடி முன்னாள் தலைமை நீதிபதி சந்திரசூட் வீட்டிற்கு சென்றாரே, செருப்பு வீச்சு தாக்குதலுக்கு ஆளான தலைமை நீதிபதி கவாய் வீட்டிற்கு ஏன் செல்லவில்லை? பட்டியலினத்தவர் வீட்டிற்கு சென்றால் மோடி அரசு தீட்டாகி விடுமா? இதுதான் கூட்டாட்சி தத்துவத்தின் மாண்பா?

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தமிழ்நாட்டிற்கு வந்த போது ஸ்ரீரங்கம் கோவிலுக்குள் சென்று சாமி கும்பிட்டு விட்டு மகிழ்ச்சியோடு சென்றாரே இது போல் அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவிற்கு அவரை அழைக்காததும் அனுமதிக்காததும் ஏன்? இவர்கள்தான் பழங்குடியின, பட்டியலின மக்களின் பாதுகாவலர்களா?

ஆதிதிராவிட மாணவர் விடுதி என்று இருக்கக் கூடாது என்று சமூகநீதி விடுதி என்று மாற்றி அமைத்தவர் தமிழ்நாடு முதல்வர். அந்த விடுதிகளில் உணவு நன்றாக இல்லையாம் 40% விடுதிகள் மூடப்பட்டு விட்டதாம் கண்டுபிடித்துள்ளார் அண்ணாமலை. உணவை நீங்கள் சாப்பிட்டு பார்த்தீர்களா? எந்த மாணவர் உங்களிடம் குறை சொன்னார். கர்நாடக முன்னாள் முதல்வர் பா.ஜ.க.வைச் சேர்ந்த எடியூரப்பா கடையில் சாப்பாடு வாங்கி வரச் சொல்லி பட்டியலினத்தவர் வீட்டில் அமர்ந்து அந்த உணவை உண்டாரே அந்த நாடகம் எங்களுக்கு தெரியாது அண்ணாமலையே!

எங்கள் முதல்வர் பட்டியலினத்தவர் வீட்டில் அமர்ந்து சாப்பிடுவதை பெருமையாக நினைப்பவர். சாப்பிட்டவர். அண்ணாமலையே நீங்கள் இதுவரை ஒரு பட்டியலினத்தவர் வீட்டிலாவது உணவு உண்டது உண்டா? இன்று ஆதிதிராவிட மாணவர்கள் 350க்கும் மேற்பட்டவர்கள் அயல்நாடுகள் சென்று படிக்க நிதி ஒதுக்கி ஊக்கப்படுத்தி உதவி வருகிறார் தமிழ்நாடு முதல்வர். பா.ஜ.க ஆளும் ஏதாவது ஒரு மாநிலத்தில் இப்படி எந்த முதல்வராவது செய்தது உண்டா? எனவே அண்ணாமலையே இனிமேலும் பட்டியலின மாணவர்களைப் பற்றிப் பேசாதீர்கள்.

பா.ஜ.க தற்போது தேர்தல் நெருங்கி வருவதால் அயோத்தியைப் போல திருப்பரங்குன்றத்தை கையில் எடுத்துள்ளனர். பல நூறு ஆண்டுகளாக தீபம் ஏற்றப்படாத சர்வே கல்லில் தீபம் ஏற்ற வேண்டுமென்று அடம் பிடிக்கின்றனர். அங்குள்ள தர்காவில் சந்தனக்கூடு ஓடியதாம் தீபம் ஏற்றக்கூடாதா என்கிறார்கள். சந்தனக் கூடு ஆண்டாண்டு ஓடுகிறது சர்வே தூணில் தீபம் ஏற்றியதற்கு சான்று இல்லை.

சமணர்கள் காலத்து கல்தூண் என்கிறார்கள். அப்போது கூட அதில் தீபம் ஏற்றியதில்லை. சான்றும் இல்லை. மதவெறியை தூண்டி மக்களை பிரிக்க பார்க்காதீர்கள். அண்ணன் தம்பியாக வாழ்பவர்கள் தமிழர்கள். மதத்தை பார்ப்பதில்லை மனிதத்தை நேசிப்பவர்கள்.

இன்றைய தமிழ்நாடு அரசு ஐந்தாண்டு நிறைவதற்குள் 4000 கோயில்களுக்கு குடமுழுக்கு நடக்கவுள்ளது. திருப்பரங்குன்றத்திலும் கோயில் குடமுழுக்கு நடத்தியது இன்றைய முதல்வர் அரசு. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது எங்கள் கொள்கை. தி.மு.க கடவுளுக்கு எதிரான கட்சி அல்ல.

தமிழ்நாட்டில் இத்தனை ஆயிரம் கோயில்களுக்கு குடமுழுக்கு நடந்தது போல் பா.ஜ.க. ஆளும் எந்த மாநிலத்திலாவது குடமுழக்கு நடந்துள்ளதா? பா.ஜ.க.வினரே கூற முடியுமா? அயோத்தியைத் தவிர உங்களுக்கு வேறொன்றும் தெரியாது. அயோத்தியில் கூட ராமர் பா.ஜ.க. வேட்பாளரை தோற்கடித்து சமாஜ்வாடி வேட்பாளரைத் தான் வெற்றி பெற செய்துள்ளார். இது தான் தமிழ்நாட்டிலும் நடக்கப் போகிறது.

வரும் 2026 தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி படுதோல்வியை சந்திக்க போகிறது. நூறு முறை தமிழ்நாட்டிற்கு பிரதமர் மோடி - அமைச்சர் அமித்ஷா வந்தாலும் 200க்கும் மேற்பட்ட தொகுதியில் தி.மு.க தலைமையிலான கூட்டணி வெற்றி பெறுவது உறுதி. தமிழ்நாடு முதல்வர் அண்ணன் தளபதி மீண்டும் தமிழ்நாட்டு முதல்வராக அமரப் போவதும் உறுதி.

எடப்பாடி, முருகன், அண்ணாமலை, நயினார் எல்லாம் தேர்தல் மேட்சுக்கு தயாராகுங்கள். எங்கள் தலைவரின் ஆப்ஸ்பின் சுழற்சி அபாயமானது. அவசியம் ஹெல்மெட்டும், பேடும், அப்டமன் கார்டும் அணிந்துக் கொள்ளுங்கள். 200 என்பது 234 கூட ஆகலாம். நீங்கள் எல்லாம் தோல்வியால் துவண்டுவிடக் கூடாது அல்லவா அதற்காகத் தான் கூறுகிறோம்.